கடவுளர் சிலைகள்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): *மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—*

(அ) 1972 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 6 ஆம் நாளளவில் தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டினத்திற்கருகிலுள்ள சின்ன தும்பூரில் ஏராளமான கடவுளர் சிலைகள் மீட்கப்பட்டனவா ?

(இ) ஆமெனில், அவை குறித்த விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஒரு சிலை மட்டும்.

(இ) ஸ்ரீநடராஜர் சிலை.

எடை.		உயரம்.	
கி. கி.	கிராம்.	அடி.	அங்.
47	500	2	9½

திரு. ஜி. சுவாமிநாதன் : அதனுடைய விலை அல்லது மதிப்பு எவ்வளவாக இருக்குமென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அதனுடைய எடை 47½ கிலோ கிராம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மதிப்பு எவ்வளவு என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

Pending cases in the office of the Assistant Commissioner of the Hindu Religious and Charitable Endowments in Madras.

* 216. *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the total number of cases filed during (1) 1968, (2) 1969, (3) 1970, (4) 1971, and (5) 1972 now pending in the office of the Assistant Commissioner of Hindu Religious and Charitable Endowments in Madras ?

சென்னை இந்து சமய-அறக்கட்டளைத் துறை உதவி ஆணையர் அலுவலகத்தில் உள்ள முடிவுறு வழக்குகள்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் : *மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—*

1968, 1969, 1970, 1971, 1972 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட மொத்தம் எத்தனை வழக்குகள், சென்னை, இந்து சமய-அறக்கட்டளைத் துறை உதவி ஆணையாளர் அலுவலகத்தில் தற்போது முடிவுறு நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் வேண்டுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே தனி நபர் ஊதிய முரண்பாட்டுக் குழுவின் சிபாரிசு. . .

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் அவர்கள் : இந்தக் கேள்விக்குச் சம்பந்தப்பட்டதா? முடிந்த கேள்விக்கு சம்பந்தப்பட்டதா? மத்தியில் ஒன்றும் பேசக்கூடாது. அது வரும்போது பேசலாம்.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, விளக்கம் தானே கேட்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : வினாக்கள் முடிவடைந்து விட்டன.

[குறிப்பு.—ஓர் உரையின் துவக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(1) பேரவையிலிருந்து செய்திகள்.

MR. CHAIRMAN : I have received messages from the Hon. Speaker transmitting copies of the following Bills as passed by the Legislative Assembly and signed by him for the concurrence of the Council :

1. The Tamil Nadu Debt Relief Bill, 1972 (L.A. Bill No. 21 of 1972) ; and

2. The Tamil Nadu Agriculturists Relief (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 22 of 1972).

(2) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழு உறுப்பினர் தேர்தல்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு செல்லுபடியாகும் வகையில் நேமகம் செய்யப்பட்ட வேட்பாளர் திரு. எம். இராமநாதன், எம். எல். சி., அவர்கள் ஒருவரே. அவர் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழு உறுப்பினர் பதவிக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக நான் இதனால் மேலவைக்கு அறிவிக்கிறேன்.